சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் 2009–2010–ஆம் ஆண்டுக்கு ஐந்து நிறுவனங்களை தேர்வு செய்து தலா ரூ.5 இலட்சம் பரிசுத் தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை

அரசாணை (வாலாயம்) எண்.102 நாள்: 15.4.2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி–2) துறை, நாள் 2.7.2007.
2. அரசு கடித எண். 1779/மாஅதி–1/2009–1, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 29.1.2009.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.63986/2009/பராஅ 1.1, நாள் 27.3.2010.

* * * * *

**ஆணை:**

வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களது சமூக பொறுப்பின் ஒரு பகுதியாக பாராட்டத்தக்க வகையில் பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் 2007–2008 ஆம் ஆண்டு முதல் விருது ஏற்படுத்தி ஆண்டுதோறும் 5 சிறந்த நிறுவனங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையும், நற்சான்றிதழும் வழங்க அரசாணை (நிலை) எண்.117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி–2) துறை, நாள் 2.7.2007–ன் வழி ஆணைகள் வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் 2009 –10 ஆம் ஆண்டுக்கான 10 நிறுவனங்களை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து அதிலிருந்து 5 நிறுவனங்களை அரசு இறுதியாக தேர்வு செய்ய வேண்டி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது 27.3.2010 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியிருந்தார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்து, பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் வர்த்தக மற்றும்

(த.பி.பா)

தொழில் நிறுவனங்கள் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் 2009–2010–ஆம் ஆண்டுக்கு கீழ்கண்ட ஐந்து நிறுவனங்களை தேர்வு செய்து, அந்நிறுவனங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையும் நற்சான்றிதழும் வழங்க இதன் வழி ஆணையிடுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| 1. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், நெய்வேலி, கடலூர் மாவட்டம். |
| 2. | ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம். |
| 3. | பன்னாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம். |
| 4. | டைட்டான் இண்டஸ்டிரீஸ் நிறுவனம், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 5. | சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் தனியார் நிறுவனம், கோயம்புத்தூர் மாவட்டம். |

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளர், சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடலூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்,
ஈரோடு மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள்.
ஆணையாளர், கருவூல கணக்கு, சென்னை–15.
மாநில தலைமை கணக்காயர், சென்னை– 6/18/35.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.